பக்கங்கள்:10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 09 ஞாயிற்றுக்கிழமை 23.03.2025 கதிர் 135

## 20 ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் கிடப்பில் தூங்குகின்றன

### அவற்றையும் வெளியிடுமா ஆளும்தரப்பு?

30 வருடங்களுக்கு முந்தைய பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையை தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு வெளியிட்டுள்ள நிலையில் இன்னும் இருபது ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் செயல்படுத்தப்படாமல் கிடப்பில் போட்டப்பட்டுள்ளன, அவற்றையும் இந்த ஆளும்தரப்பு வெளியிட்டு வைத்து நடவடிக்கை எடுக்குமா என்கிற கேள்வி சமூகத்திலிருந்து எழுப்பப்படுகின்றது.

''கடந்த பத்து ஆண்டுகளில் பல்வேறு ஆளும்தரப்புகளால் நியமிக்கப்பட்ட சுமார் 20 ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகள்



இன்னும் செயல்படுத்தப்படாமல் குப்பைத் தொட்டியில் கிடக்கின்றன'' என்று

☞ 2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இம்முறைப் பட்டமளிப்பு விழா மூன்று நாள்களாகக் கோலாகலமாக இடம்பெற்று முடிந்துள்ளது. போர்க் காலச் சமூகத்திலிருந்து பல்கலைக்கழகம் எவ்வளவு தூரம் விலகிச் சென்றுள்ளது என்பதனை உணர்த்தும் விதமாக இந்தப் பட்டமளிப்பு விழா காட்சியளித்து என்பது பலரதும் கருத்து. பல்கலைக்கழகத்திற்குள் பட்டம்

☞ 2

## லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் மூன்று பேர் நேற்றுக் கைது

ஆயுர்வேத மருத்துவ கவுன்சிலிடமிருந்து பாரம்பரிய மருத்துவச் சான்றிதழைப் பெற்றுத் தருவதற்காக ரூ. 5 லட்சத்தை லஞ்சமாகப் பெற முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் தொழிலதிபர்கள் மற்றும் அரசு சாரா நிறுவன ஒருங்கிணைப்பாளர்

☞ 8

## தேர்தல் முறைப்பாடுகளுக்கு அலைபேசி செயலி அறிமுகம்

2025 உள்ளாட்சித் தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை அலைபேசி (மொபைல்) வழியாகச் சமர்ப்பிப்பதற்காக புதிய செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிமுகநிகழ்வு நேற்றுக்காலை தேர்தல் ஆணையத்தில் நடைபெற்றது. முறையான மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் மூலம் தேர்தல் புகார்களைச் சமர்ப்பிக்க இந்த அலைபேசிச்

☞ 2

## இலங்கையைப் பொறுக்கூற வைக்க உயர் வழிமுறைகளைத் தேடுங்கள்

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடம் அனந்தி வலியுறுத்து

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை பொறுப்புக்கூறச் செய்வதற்கான உயர் வழிமுறைகளை கையாள வேண்டும் என்று வடமாகாண முன்னாள் அமைச்சரும், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் பொதுச்செயலாளருமான அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நேற்று இடம்பெற்ற பிரிவு நான்கு நிகழ்ச்சி நிரலான 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள்' என்ற தலைப்பின் கீழ் உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் இலங்கைத் தீவில் ஈழத்



தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சர்வதேச குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படவில்லை. அதனைச் செய்வதற்காக இலங்கை ஆளும்தரப்புக்கு நேரமும், காலமும் வழங்கப்படுகின்றது. இலங்கை குறித்து தீர்மானங்களை நிறைவேற்றியவர்கள் தங்கள்

☞ 2

## இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால் ஒத்துழைக்க ஓடி வருவார் ரணில்

### ஐ.தே.க. தலைவர் வஜிர தெரிவிப்பு

நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் எந்தவித நிபந்தனையும் இன்றி தேவையான ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

☞ 2

## சிறையில் தேசபந்துவுக்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனுக்கு விசேட பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

தேசபந்து தென்னகோன் தற்போது பல்லேகல தும்பற சிறைச்சாலையில் பாதுகாப்பான சிறைகூடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று திணைக்களம் தெரிவித்தது.

நீதிமன்ற உத்தரவுக்கமையவே அவருக்கு விசேட பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் திணைக்களம் கூறியது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து

☞ 8

## இலவச சுகாதார சேவைக்கான ஐ.நாவின் ஆதரவு தொடரும்

### அதன் தெற்காசிய பிராந்திய இயக்குநர் தெரிவிப்பு

இலங்கையின் இலவச சுகாதார சேவையின் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆதரவு தொடர்ந்து வழங்கப்படும் என்று ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் அலுவலகத்தின் (UNOPS) தெற்காசிய பிராந்திய இயக்குநர் சார்லஸ் கல்லனன் தெரிவித்தார்.

சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்தவுடன் நடைபெற்ற சந்திப்பின்போது சார்லஸ் கல்லனன் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

நாட்டில் தற்போது நடைபெற்றுவரும் சுகாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப் பகுப்பாய்வு செய்து, தேவைக்கேற்ப அந்தத்

☞ 8

## சிறைக்கு வெளியிலிருந்து உணவு தேடும் தேசபந்து

தும்பர சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், தனக்கு வெளியில் இருந்து உணவு கொண்டு வர அனுமதிக்குமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கோரிக்கை பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

நியாயமான காரணங்களை வழங்கி, தடுப்புக் கைதிகள் வெளியில் இருந்து உணவு கோர உரிமை உண்டு என்று சிறைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிகம ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற



துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில், பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஏப்ரல் 3 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆயிரம் புதிதாக நிறுவப்படும்

அரசால் செயல்படுத்தப்படும் ஆரம்ப சுகாதார சேவைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், பொதுமக்கள் எளிதில் அணுகக்கூடிய ஆயிரம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக நிறுவப்படும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அம்பாறை தாதியர் கல்லூரியில் நடைபெற்ற 2020-பு மாணவர் தாதியர் குழுவிற்கான தலைக்கவசம் அணிவித்து சேவைக்கு அவர்களை அர்ப்பணித்துக்கும் விழாவில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார்.

☞ 2

## மாத்தறையில் வெள்ளியிரவும் துப்பாக்கிச் சூடு; இருவர் இறப்பு

மாத்தறை- தெவிநுவர பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை (21) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தெவிநுவர பகுதிக்கு நேற்றைய தினம் இரவு 11.45 மணியளவில் வானில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சிலர் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரைச் சுட்டுக்கொலை செய்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

தெவிநுவர பகுதியைச் சேர்ந்த கசுன் தாரக்க என்ற 29 வயதுடைய இளைஞனும் யொமேஷ்

☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

பெற்ற மாணவர்களை வாழ்த்தி பெரிய பெரிய பனர்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. இதுவொரு புதிய கலாசாரமாக முகிழ்த்துள்ளது. அடுத்தடுத்த வருடங்களில் இது இன்னும் தீவிரம் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.








இந்தவாழ்த்துபனர்கள்ஏதோமாணவர்கள் செய்தசாதனைகளுக்காகவைக்கப்பட்டவைகள் என்று நினைத்துவிடாதீர்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 'ட்ராகன்' யார் என்பதை அடையாளப்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்தன. 'ட்ராகன்' என்பது அண்மையில் வெளியான ஒரு தமிழ்த் திரைப்படம். 'கெத்து'க் காட்டுதல் என்ற பெயரில் படிக்காமல் கோட்டைவிட்ட ஒரு மாணவனின் வாழ்க்கைபற்றிய கதை அது. கடைசியில்'கெத்து' காட்டுவது முக்கியமில்லை, படிப்பதுதான்முக்கியம்என்றசெய்தியைத்தான் அந்தப் படம் சொல்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டிருந்த பனர்களை இதில் எந்த வகையில் புரிந்துகொள்வது என்பதுதான் சிக்கல். பல பனர்களின் படங்களுடன் அவர்களை 'ட்ராகன்' என்றும் 'கெத்து சீனியர்' என்றும் விழிக்கப்பட்டிருந்தது. அந்தத் திரைப்படத்தின்படி பார்த்தால், இவர்கள் எல்லாம் படிக்காமல் எப்படிப் பட்டம் பெற்றார்கள்? எனக்கு விடை தெரியவில்லை, உங்களுக்குத் தெரிந்திருந்தால் என்னுடைய மின்னஞ்சலுக்குப் பதிலைத் தட்டிவிடுங்கள் தெரிந்துகொள்கின்றேன்.

.........................................................................

யாழ்ப்பாணத்திலும்வடக்குகிழக்கின்மாவட்ங்களிலும் மட்டுமல்ல இலங்கை முழுவதுமே இந்தத் தடவை உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதில் பெரும் பிரச்சினைதான். கிட்டத்தட்ட 15 சதவீதமான அதாவது 400 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிகப் பெரும்பாலானவை, இளைஞர்களின் வயதை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை ஒழுங்காகச் சமர்ப்பிக்காமை மற்றும் பெண் வேட்பாளர்கள் தொடர்பான ஆவணங்களை ஒழுங்காகச் சமர்ப்பிக்காமைகாரணமாகநிகழ்ந்தவைகளே என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெளிவாகக் கூறுகின்றது.

பட்டியல்களில் பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தின் நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தைச்சேர்க்கவேண்டியதேவைகளைப் பூர்த்திசெய்வதில் உள்ள சிக்கல்கள், அத்துடன் போட்டியாளர்களின் ஆதார ஆவணங்கள் இல்லாதது ஆகியவை இந்த முறை ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையிலான வேட்புமனு பட்டியல்கள் நிராகரிக்கப்படுவதற்கு வழிவகுத்ததாக தேர்தல் ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார்.

இலங்கை முழுவதும் 366 உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடக்கிறது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் 2017ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டத்தின்17 ஆம்எண் புதியதிருத்தங்களின்படி வேட்புமனு பட்டியலில் பெண் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தில் சதவீதத்தைச் சேர்ப்பதற்கான புதிய விதிமுறைகளே பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகத் தெரிகிறது.

"இளைஞர் பிரதிநிதித்துவத்தின் வயதைக் குறிப்பிடுவதற்கு, சான்றளிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் போன்ற துணை ஆவணங்கள் ஒவ்வொருபட்டியலிலும்சேர்க்கப்படவேண்டும். பலர் அவற்றைச் சேர்க்கத் தவறிவிட்டனர், அல்லது அதை முறையாகச் செய்யவில்லை" என்று ஆணையாளர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல இதில் அரசியல்வாதிகள் விட்ட மிக முக்கிய தவறு எது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்தப் பட்டியல்களைச் சமர்ப்பிக்கப் போதுமான நேரம் இருந்தபோதிலும், கிட்டத்தட்ட அனைவரும் காலக்கெடுவின் கடைசி நிமிடத்தில் அவற்றைச் சமர்ப்பித்ததால், அவற்றைநிராகரிப்பதைத்தவிரஅதிகாரிகளுக்கு வேறு வழியில்லை" என்று அவர் கூறினார். அதுமிகச்சரியானது என்பது யாழ்ப்பாணத்தில் நிரூபணமாகியிருந்தது.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய புதன்கிழமை யாழ். மாவட்டச்செயலகத்திற்குச் சென்ற ஈபிடிபியினரின் வேட்புமனுக்களைப் பரிசீலித்த அதிகாரிகள், அவற்றில் இளைஞர்களின் பிறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தனர். அதனையடுத்து உடனடியாக அவற்றைப் பெற்று வெள்ளிக்கிழமை மீண்டும் தமது வேட்புமனுக்கள் அனைத்தையும் நிராகரிப்பு இன்றி ஈபிடிபியால் சமர்ப்பிக்க முடிந்துள்ளது.

இதனைச் செய்யாமல் கடைசி நாள் வரையில் இருந்துவிட்டு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தவர்களே வேறு வழியின்றி நிராகரிப்புக்கு உள்ளாகவேண்டியவர்களாக இருந்திருக்கிறார்கள்.

இந்தத்தடவைதேர்தல்திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்றபெற்ற 2,900 க்கும் மேற்பட்ட வேட்புமனுக்களில் 400 நிராகரிக்கப்பட்டன என்றும், இதில் சட்ட தலையீட்டை நாடுவதைத் தவிர வேட்பாளர்களுக்கு வேறுவழி இல்லை என்றும் ரத்நாயக்க கூறினார். அரசியலாளர்கள் கொஞ்சம் பொறுப்போடு நடந்துகொண்டிருந்தால் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம் என்பதுதான் உண்மை.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## 20 ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் மற்றும் சட்டத்தரணி பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்திருக்கிறார்.

உதுலகம ஆணைக்குழு அறிக்கை, மேக்ஸ்வெல் ஆணைக்குழு அறிக்கை, லலித் அதுலத்முதலி கொலை ஆணைக்குழு அறிக்கை, விஜய குமாரதுங்க கொலை குறித்த ஆணைக்குழு அறிக்கை மற்றும் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கொலை குறித்த ஆணைக்குழு அறிக்கை ஆகியவை செயல்படுத்தப்படாத சில அறிக்கைகள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

போதுமான ஆதாரங்கள் இருந்தால், இந்தக் குழுவின் பரிந்துரைகளை இப்போதும் செயல்படுத்த முடியும் என்றும் பேராசிரியர் தெரிவித்தார்.

நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் பலவற்றினதும் விசாரணைகளுக்காக கடந்த காலங்களில் இரண்டு பில்லியன் ரூபாய்களுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளதாகச் சில வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருந்தாலும் அவற்றினால் ஏற்பட்ட பயன் என்று எதுவும் இல்லை என்பதையும் சமூக ஆர்வலர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட படலந்தா ஆணைக்குழுவின் அறிக்கை மீது இரண்டு நாள் விவாதம் நடத்த நாடாளுமன்ற விவகாரக் குழு முடிவு செய்துள்ளது.

முதல் நாள் விவாதம் ஏப்ரல் 10 நடைபெற உள்ளது. இரண்டாவது நாள் விவாதத்தை மே மாதத்தில் பிற்பகுதியில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தேர்தல் செலவு உச்ச வரம்பு இன்னும் முடிவாகவில்லை

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பரப்புரைச் செலவுகளை ஒழுங்குபடுத்துவதுகுறித்துஅரசியல்கட்சிகளின் பொதுச்செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரதிநிதிகளுடன் தேர்தல்கள் ஆணைனக்குழுகலந்துரையாடலில்ஈடுபட்டது.

இராஜகிரியவில் உள்ள தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் குறித்து ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்ததாவது:

சமகால நிலைமைகளுக்கு அமைவாக வேட்பாளர்களுக்கான பரப்புரைச் செலவு வரம்புகளை நிர்ணயிப்பது தொடர்பில் தேர்தலில் போட்டியிடும் தரப்பினரின் அபிப்பிராயம் கேட்டறிப்பட்டது. எனினும், இந்தக் கலந்துரையாடலில் செலவீனத்துக்கான இறுதித்தொகை இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆகவே மீண்டும் ஒருதடவை கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதன் பின்னர் இறுதியான தொகை தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என்றார்.

அத்துடன், எதிர்வரும் மே ஆறாம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் கிட்டத்தட்ட 80 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். 107 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 49 சுயேச்சைக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்தி அவர்கள் போட்டியிடுகின்றனர்.

மன்னார்,பூநகரிமற்றும்தெஹியத்தகண்டிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 24 ஆரம்பமாகவுள்ளது. மார்ச் 27 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை அவை ஏற்றுக்கொள்ளப்படவுள்ள என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புவிசார் அரசியலுக்கு ஏற்றவாறு தீவில் ஆட்சி மாற்றங்களைச் செய்வதற்கே அதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், தற்போது வரையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் போரால்பாதிக்கப்பட்டவடக்குமற்றும்கிழக்கில் ஆதாரங்களைச் சேகரிப்பதற்கானதொரு அதிகாரப்பூர்வமான கட்டமைப்பை அங்கு நிறுவுவதற்கு முடியவில்லை. இதுவொரு மிகப்பெரிய குறைபாடாகும், ஏனெனில் மின்னஞ்சல் மற்றும் பிரதிநிதிளினால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் மூலம் மட்டுமே ஆதாரங்களை சேகரிக்க முடியுமான நிலைமையே காணப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான சரியானதொருபொறிமுறையைநிறுவுவதற்குத் தவறிவிட்டது. எனவே, 'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனம் தேவைப்படும் மனித உரிமைகள் சூழ்நிலைகள்' என்ற நிகழ்ச்சி நிரலின் கீழ் அதைக் கொண்டுவருமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

இலங்கை ஆளும்தரப்பானது ஐ.நாவின் தீர்மானங்களுடன் ஒத்துழைக்கத் தவறியிருப்பதோடு, அதன் உறுதிமொழிகளில் இருந்து பின்வாங்கியும் உள்ளது. ஆகவே இலங்கை ஆளும்தரப்பு பொறுப்புக்கூறலைச் செய்வதற்காக பேரவையானது உயர் வழிமுறைகளை உள்ளடக்கிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

## ஆரம்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டு மக்களை குணப்படுத்தும் பணியில் செவிலியர்களுக்கு பெரும் பொறுப்பும் பங்கும் இருப்பதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் கூறினார்.

செவிலியர் மாணவர்களுக்கான மூன்று ஆண்டு பாடநெறியின் கோட்பாட்டு மற்றும் நடைமுறைப்பயிற்சியின் முதலாம் ஆண்டை வெற்றிகரமாக முடித்த 140 மாணவர்களுக்கு தலைக்கவசங்கள் வழங்கப்பட்டு சேவைக்கு அர்ப்பணிக்கப்பட்டன. இந்தக் குழு, அம்பாறை தாதியர் கல்லூரி நிறுவப்பட்டதிலிருந்து அதன் சேவைக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்ட 18ஆவது மாணவர் செவிலியப் பிரிவாகும்.

## மாத்தறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நதீஷான்என்ற28வயதுடையஇளைஞனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரும் தெவிநுவர, கபுகம்புர பிரதேசத்தில் நடைபெற்ற பிறந்த நாள் நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு மீண்டும் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், துப்பாக்கித்தாரிகள் பயன்படுத்தினர் எனக் கூறப்படும் வான் எரிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்தில் வைத்து ரி- 56 ரக துப்பாக்கி, தோட்டாக்கள் என்பனபொலிஸாரால்கைப்பற்றப்பட்டுள்ளன. துபாயில் உள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'பாலே மல்லி' என்று அழைக்கப்படும் ஷெஹான் சத்சர ஹேவத் என்பவரின் தலைமையில் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

'பாலே மல்லி' என்பவருக்கும் உயிரிழந்த இளைஞர்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேர்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக ஆணையகம் தெரிவித்துள்ளது.

இதன் அறிமுக நிகழ்வில் பேசிய தேர்தல் ஆணையத் தலைவர் ரத்நாயக்க, 'பொதுமக்களிடம் முறைப்பாடுகள் இருந்தால், அவர்கள் இந்தச் செயலி மூலம் அதைச் சமர்ப்பிக்கலாம். முறைப்பாடுதந்தவர்கள்யார் என்பதையும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதையும் இந்தச் செயலி மூலம் அறிந்துகொள்ள முடியும்' என்றார்.

'இந்த செயலி மூலம் வீடியோக்கள் மற்றும் படங்களை வழங்கும் வசதியும் உள்ளது' என்றும் அவர் மேலும் கூறினார்.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராகவே இருக்கின்றார் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

கொழும்பில்சனிக்கிழமை(22) இடம்பெற்ற மக்கள்சந்திப்பின்பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடளாவிய ரீதியில் யானை சின்னத்தின் கீழ் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் களமிறங்கியுள்ளது. நாடு வீழ்ச்சியடைந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐக்கிய தேசிய கட்சியே அதனை மீட்டெடுத்திருக்கின்றது.

அதற்கமைய இனிவரும் காலங்களிலும் நாட்டுக்காக ஐக்கிய தேசிய கட்சி அதன் பணிகளைத்தொடர்ந்தும்முன்னெடுக்கும். 1994ஆம் ஆண்டு எதிர்க்கட்சி தலைவரானதில் இருந்தே ரணில்விக்கிரமசிங்கஇலக்குவைக்கப்பட்டிருக்கின்றார். எனவே தற்போது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளவேண்டாம் எனஅவ்வாறானவர்களிடம்கேட்டுக்கொள்கின்றோம். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை எந்தவொரு சமூகத்தினரிடமும் தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. எனவே முதலில் இந்தஅறிக்கையைமுழுமையாகவாசிக்குமாறு சகலரையும்வலியுறுத்துகின்றோம். அவ்வாறு அதனை முழுமையாக வாசிப்பவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வேலைத்திட்டங்களிலிருந்து வெளியேறுவர்.

நாட்டுக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றித் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு அவர் தயாராகவே இருக்கின்றார். எனவே இளம் தலைமுறையினர் வரலாற்றைத் தெரிந்துகொண்டு அதற்கமைய தீர்மானங்களை எடுக்க வேண்டும் - என்றார்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கில் பொதுமக்கள் எதிரியாகவே பார்க்கிறார்கள்

## பிள்ளையானுடன் கூட்டுச் சேர்ந்த கருணா தெரிவிப்பு
## கிழக்கு மாகாண சபையே அவரது இலக்காம்

வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்துவிட்டார்கள். அவர்களை எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் போலித்தேசியவாதிகளுக்கு இடமளிக்கமுடியாது. அவர்களை அகற்றவேண்டும். அவர்கள் எமது மக்களை தவறாக வழிநடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றுவதுதான் எமது பிரதான இலக்காகும் என்று கருணா என்றழைக்கப்படும் முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் நடைபெற்ற கிழக்குத் தமிழர் கூட்டமைப்பில் கருணா அம்மான் இணைந்து கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் ஆயத ரீதியான போராட்டத்திலிருந்து எதற்காக ஜனநாக வழிக்குத் திரும்பினோமோ அந்த இலக்கை அடைவதற்காவே மீண்டும் இணைந்திருக்கின்றோம். வடக்கு மாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிராகரித்துவிட்டார்கள். அவர்களை எதிரிகளாகவே பார்க்கின்றார்கள். அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் போலித்தேசியவாதிகளுக்கு இடமளிக்கமுடியாது. அவர்களை அகற்ற வேண்டும். அவர்களின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த வகையில் கிழக்கு மாகாண மக்கள் பல விடயங்களில் தெளிவுற வேண்டியுள்ளது. அதற்காக எமது பயணமானது முடிவற்றதாக தொடர்ச்சியானதாக இருக்கும். நாம்




வரலாற்றை படைத்தவர்கள். நாம் வரலாற்றை மாற்றியமைத்தவர்கள். ஆகவே எம்முன்னிலையில் வந்து நின்று தேசியம் பேசுவதற்கு எவருக்கும் அருகதையில்லை என்றார்.

## மஸ்தான் விளக்கம்

வரவு செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பிற்கான வாக்கெடுப்பில், எதிர்க்கட்சி உறுப்பினரான இலங்கைத் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்.

வரவு செலவுத் திட்ட மூன்றாம் வாசிப்பிற்கான வாக்கெடுப்பு வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றது. இதில், வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 159 வாக்குகள் கிடைத்தன. எதிராக 45 வாக்குகள் பதிவாகியிருந்தன.

இதன்படி, வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பிற்கான வாக்கெடுப்பில் ஆளும்தரப்பு 114 வாக்குகள் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது.இதற்கிடையில், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தனது முடிவு குறித்து, அத தெரண செய்தி சேவைக்கு தனது கருத்துகளை தெரிவித்திருந்தார்.

இது ஆளும்தரப்பின் முதல் பட்ஜெட். மக்கள் அவர்களை ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள். நாட்டிற்கு ஒரு நல்ல விடயம் நடக்கவேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். எமது நாட்டு மக்களின் கருத்துக்கள் மற்றும் விருப்பத்துடன்தான் நான் செயற்படுவேன்.அதனால்தான் நானும் ஆதரவாக வாக்களித்தேன்.

நாம் பொறுத்திருந்து பார்ப்போம். ஆளும்தரப்பு மக்கள் நினைத்தவாறு செயல்படுமா? என்பதைப் பார்ப்போம். மக்கள் கொடுத்துள்ள அதிகாரத்திற்கு எதிராக செயல்படுவதைவிட, மக்களுக்காக எங்கள் ஆதரவை வழங்குவதுதான் நாம் செய்ய வேண்டியது - என்றார்.



## கிழக்குத் தமிழர் கூட்டமைப்பின் இலக்கு அரசியல் ரீதியாக எழுந்து நிற்பதுதானாம்

கிழக்குத்தமிழர் கூட்டமைப்பு என்ற அமைப்பை பலப்படுத்திக் கொண்டு அரசியல் ரீதியாக நிரூபிக்கக் கூடிய சக்தியாக எழுந்து நிற்பதே எங்கள் நோக்கமாக இருக்கின்றதென முன்னாள் இராஜாங்க அமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு றிவோரா ஹோட்டலில் நடைபெற்ற கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு உருவாக்கக் கூட்டத்தில் கருணா அம்மான் இணைந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்: அவர் மேலும் தெரிவித்ததாவது:

இற்றைக்கு 21 ஆண்டுகளுக்கு முன்னர் இதே மார்ச் மாதமளவில் என்று நினைக்கின்றேன் வன்னிக் காடுகள் அதிர்கின்ற அளவிலே எங்கள் தளபதி ஒரு அறிவிப்பைச் செய்கின்றார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திலே வடக்குத் தலைமைகளால் கிழக்கு மாகாணம் வஞ்சிக்கப்பட்டு வருவதை எதிர்த்துக் குரல் எழுப்பினார். அவருடைய கருத்தை ஏற்று நான் உட்பட சுமார் ஆறாயிரத்துக்கும் அதிகமான போராளிகள் போர்க்கொடி தூக்கினோம்.

ஆனாலும் அரசுடன்கூட பேச்சு நடத்திய விடுதலைப் புலிகளின் வடக்குத் தலைமை ஆயிரம் ஆயிரம் மாவீரர்களைக் கொடுத்த எம்முடன் பேச மறுத்தமை கசப்பான விடயங்கள். இந்த நிலையில் நாங்கள் அங்கிருந்து வெளியேறி ஆயுத இயக்கமாக ஒன்றும் சாதித்துவிடமுடியாது என்பதை உணர்ந்து ஒரு ஜனநாயக இயக்கமாக ஒன்றிணைந்து செயலாற்ற முனைந்தோம்.

கட்சியாக நாங்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை உருவாக்கினாலும் நானும் கருணா அம்மானும் ஒன்றாக இணைந்து பயணிக்க முடியாத சில துரதிஷ்டவசமான நிகழ்வுகள் நடந்தன. இருப்பினும் அரசியல் ரீதியில் அவர் அவரால் இயன்ற மக்கள் சேவையை ஆற்றியிருக்கின்றார். மறுபுறத்தில் நாங்களும் ஆற்றியிருக்கின்றோம்.

தற்போது பல்லின மக்கள் வாழும் இந்த மாகாணத்திலே தமிழ் மக்களினுடைய எதிர்காலம் அவர்களின் அரசியல் அதிகாரத்தினைத் தக்க வைப்பது, கல்வி பொருளாதார சுகாதார உட்கட்டுமான மேம்பாடு, மாகாண சபையின் அதிகாரம் என்பவற்றைப் பார்க்கும்போது நாங்கள் தொடர்ந்தும்பிரிந்துசெயற்பட்டுக்கொண்டிருப்பது இந்த மக்களுக்கும் இந்த மாகாணத்திற்கும் பின்னடைவை ஏற்படுத்தும். ஏனெனில் எமது சமூகம் தொடர்ந்து பின்தள்ளப்படுகின்ற அபாயம் ஏற்பட்டிருப்பதை நாங்கள் உணர்கின்றோம்.

கடந்த கால கசப்புகளை மறந்து எதிர்காலத்தில் ஓர் உறுதியான கிழக்கு மாகாண அரசியற் தளத்தை நிறுவவேண்டும் என்ற பிரயத்தனத்தின் காரணமாகவும் எமது கட்சியின் சிரேஸ்ட தலைவரின் முயற்சியின் காரணமாகவும் நாங்கள் கருணா அம்மானுடனான ஒப்பந்தத்தைச் செய்திருக்கின்றோம். இதனூடாக நாங்கள் எமது மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்கும், சிறந்த ஓர் அரசியற் கட்டமைப்பை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

நாங்கள் அண்மையில் உருவாக்கியுள்ள கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு என்ற அமைப்பையும் பலப்படுத்திக்கொண்டு அரசியல் ரீதியாக நிரூபிக்கக்கூடிய சக்தியாக எழுந்துநிற்பதே எங்கள் நோக்கமாக இருக்கின்றது. எனவே எமது கிழக்கு மாகாண மக்களே நாங்கள் முன்னரே கூறிய 21 ஆண்டுகளுக்கு முன் இடம்பெற்ற வஞ்சிப்பு போலவே 70, 80 ஆண்டு காலமாக நாங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றோம், வஞ்சிக்கப்பட்டிருக்கின்றோம், பல துன்பமான சம்பவங்களைக் கடந்து வந்திருக்கின்றோம்.

2008ஆம் ஆண்டின் பின் ஓரளவு எமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்திய சமூகமாக நாம் நின்றிருக்கின்றோம். இப்போது அந்த நிலைமை சற்று மாறுபட்டிருக்கின்றது. அதேபோன்று ஏனைய தேசிய மட்ட அரசியல் சக்திகளுக்குச் சமமாக நாங்கள் எழுந்து நிற்க வேண்டிய அவசியம் கருதியும், எங்களது போராட்டத்திற்கு நாங்கள் கொடுத்த விலைகளுக்கான பதிலை நாங்கள் உயிர் வாழுகின்றபோதே எமது மக்களைத் தூக்கி நிறுத்தி அவர்களை முடியுமானவரை அபிவிருத்தி செய்துவிடுவதன் மூலம் வழங்கவேண்டும் என்ற உறுதியான எண்ணப்பாட்டினாலும் இந்தக் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

இந்த கட்டமைப்பு இனி ஒருபோதும் சிதைவடையாமல் கருத்து பேதங்கள் இல்லாமல் உறுதியாகஇருப்பதற்கானவிட்டுக்கொடுப்புகளைச் செய்வதற்கும் நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

இந்தஇணைவைஇயற்கையும்ஏற்றுக்கொள்ளும். அதேபோன்று எமது மாகாணத் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டு எம்முடன் கைகோர்த்துச் செயற்படவேண்டுமென அன்போடு கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்றத்திற்கான தாகம்

**பங்குனி 22, 2025 உலக நீர் தினம். அதைக் குறிக்கும் வேளையில், உலகளாவிய உரையாடல் தண்ணீரின் மதிப்பு மற்றும் நிலையான நீர் மேலாண்மைக்கான அவசரத் தேவையை மையமாகக் கொண்டுள்ளது. உலகெங்கிலும் உள்ள நாடுகள் சுத்தமான மற்றும் அணுகக்கூடிய நீரை உறுதி செய்வதில் அதிகரித்து வரும் சவால்களை எதிர்கொள்கின்றன. இலங்கையின் நிலைமை – குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் நீர் சேகரிப்பு மற்றும் அதன் முகாமைத்துவம் குறித்து அதிகம் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. விரைவான, தீர்க்கமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டியுள்ளது.**

**இந்த ஆண்டு உலக நீர் தினத்தின் கருப்பொருள், 'அனைவருக்கும் தண்ணீர்: யாரையும் பின்னால் விடாதீர்கள்' என்பதாகும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு வறண்ட பகுதிகளில் இது ஆழமாக எதிரொலிக்கிறது. இங்கே, நீர் பற்றாக்குறையின் சவால்கள் சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல, சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பரிமாணங்களுடனும் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளன.**

**வடக்கு மற்றும் கிழக்கில் பல தசாப்த கால மோதல்கள் பிராந்தியத்தின் உள்கட்டமைப்பில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஒரு காலத்தில் சமூகங்களுக்கு சேவை செய்த கிணறுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன அல்லது மாசுபட்டுள்ளன. விவசாயத்திற்கு இன்றியமையாத நீர்ப்பாசன அமைப்புகள் காலாவதியாகியுள்ளன. இருப்பவைகள் போதுமானதாக இல்லை. ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த போதிலும், தண்ணீருக்கான போராட்டம் தொடர்கிறது, குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் உட்பட, தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் விளிம்புநிலை சமூகங்களுக்கு தண்ணீர் இப்போதும் பெரும் சவால்தான்.**

**காலநிலை மாற்றத்தின் விளைவுகள் இலங்கையில் அதிகரித்து வருகிறது.– ஒழுங்கற்ற மழைப்பொழிவு, நீடித்த வறட்சி மற்றும் தீவிர வானிலை முறைகள் என்பன பெரும் சவால்களாக உருமாறி வருகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில், இந்த மாற்றங்கள் தரிசு வயல்கள், பொய்த்த பயிர்கள் மற்றும் தண்ணீர் தாங்கிகளை நம்பியிருக்கும் சமூகங்களுக்குக் காரணமாகி வருகின்றன. உதாரணமாக, யாழ்ப்பாண தீபகற்பம் அதன் நிலத்தடி நீர் உப்பாகும் ஆபத்தை எதிர்கொள்கிறது, அதிகரித்துவரும் ஆழ்துளைக் கிணறுகளினால் கடல்நீர் தரைக்குள் உட்புகுந்து, நிலத்தடி நீரைக் குடிப்பதற்கும் விவசாய நோக்கங்களுக்கும் பொருந்தாததாக மாற்றி வருகின்றது என்கிற குற்றச்சாட்டு நீண்ட காலமாக உள்ளது. ஆனாலும் அதற்கான தீர்வு எதுவும் முன்வைக்கப்படவில்லை.**

**நீர் அணுகலை மேம்படுத்த குறிப்பாக வடக்கில் கொழும்பு அரசும் அரசுசாரா நிறுவனங்களும் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. உப்புநீரைக் குடிதண்ணீராக்கும் திட்டம், மழைநீர் சேகரிப்பு திட்டங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் மறுசீரமைப்பு ஆகியவை அவற்றில் முக்கியமானவை. ஆனால், இவையெல்லாம் மட்டும் பிரச்சினைக்குரிய நிரந்தரத் தீர்வாகிவிடாது. யாழ்ப்பாணத்தின் குடிதண்ணீருக்காக கடந்த ஆண்டில் ஆளும்தரப்பால் புதிய திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், ஆட்சி மாற்றத்தின் பின்னர் 2025 வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான ஒதுக்கீடுகள் எவையும் இல்லை. இது துரதிர்ஸ்டவசமானது.**

**நிலையான நீர் மேலாண்மைக்கு முன்னுரிமை அளிக்கும், ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யும் மற்றும் முடிவெடுப்பதில் சமூக பங்களிப்பை உறுதி செய்யும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை ஆளும்தரப்பு மேற்கொள்வது அவசர தேவையாக உள்ளது.**

**இந்த உலக நீர் தினத்தில், பற்றாக்குறையை மட்டுமல்ல, நமது பகிரப்பட்ட பொறுப்பையும் சிந்திப்போம். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நீர் நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கு ஒருங்கிணைந்த முயற்சி தேவை. கொள்கை வகுப்பாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் சர்வதேச பங்காளிகள் இணைந்து புதுமையான, சூழல் சார்ந்த தீர்வுகளை உருவாக்கவேண்டும்.**

**தண்ணீர் என்பது வெறும் வளம் மட்டுமல்ல; அது ஒரு உரிமை. 'யாரையும் விட்டுவிட மாட்டோம்' என்று நாம் உறுதிமொழி எடுப்பதன் மூலம், ஒவ்வொரு துளியும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் சிறந்த எதிர்காலத்திற்காக பாடுபடும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒவ்வொரு விவசாயிக்கும், ஒவ்வொரு குழந்தைக்கும் முக்கியமானது என்பதை உறுதி செய்வோம். கோடை தொடங்கிவிட்ட நிலையில் இந்த உறுதிமொழியை நாம் ஒவ்வொருவரும் எடுப்பது மிக முக்கியம்.**

# காஸா விவகாரத்தில் ஆளும்தரப்பினர் வெளியிட்டது கண்டன அறிக்கை அல்ல

## நிசாம் காரியப்பர் எம்பி தெரிவிப்பு

உக்கிரம் அடைந்து வரும் காஸா விவகாரத்தில் ஆளும்தரப்பின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள ஊடகச் செய்தி ஆளும்தரப்பின் கண்டன அறிக்கை அல்ல. மூன்றே மூன்று வரிகளைக் கொண்ட அந்த செய்தியில் இஸ்ரேலின் அடாவடித்தனத்தையோ, அதற்கான அமெரிக்காவின் ஆதரவையோ கண்டிக்கும் ஒரு சொல் கூட இல்லாதது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளிக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புனித ரமழான் மாதத்தில், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பலஸ்தீன முஸ்லிம்கள் நோன்பு நோற்றுக் கொண்டிருக்கும் நிலையில், காஸா மீது பெரும் தாக்குதல்களை நடத்தி ,அங்கு இனப்படுகொலையில் ஈடுபட்டிருக்கும் இஸ்ரேலின் ஈனச் செயலை பல்வேறு உலக நாடுகளும் கண்டித்தும்,அந் நாட்டுக்கு எதிராக சில இராஜதந்திர நடவடிக்கைகளையெடுத்தும் இருக்கின்றன.

இந்த மனிதாபிமான விடயத்தில் இலங்கை ஆளும்தரப்பு இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான முன்னெடுப்பையும் மேற்கொள்ளாமல் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதைச் சுட்டிக்காட்டி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆதாரபூர்வமான அறிக்கையொன்றை வெளியிட்டதோடு, அது பற்றி நாடாளுமன்றத்திலும் உரையாற்றி இருந்தார். நானும் அதைப்பற்றி நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தேன்.

இந்தப் பின்னணியில், வெறுமனே ஆளும்தரப்பின் சார்பில் அயலுறவுத்துறை அமைச்சு வெள்ளிக்கிழமை, யாரும் கையொப்பம் இடாத ஓர் உப்புச் சப்பற்ற ஊடகச் செய்தியை மட்டும் வெளியிட்டு, இந்நாட்டு முஸ்லிம்களைத் திருப்திப்படுத்துவதற்கு எத்தனித்துள்ளதையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம். ஆளும்தரப்பு, இவ்வாறான உணர்வுபூர்வமான விடயங்களில் மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்வது அவசியமாகும் என்றுள்ளது

# கொழும்பு மாநகர சபையில் ஹனிஃபா மேயர் வேட்பாளர்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தி வைத்தியர் ருவைஸ் ஹனிஃபா களமிறக்கப்படவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரப் பகுதியில் வசிப்பவர்களின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றக்கூடிய தலைவராக வைத்தியர் ஹனிஃபா இத் தேர்தலில் களமிறக்கப்படுகிறார் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணரான ஹனிஃபா, நீர்கொழும்பு, அம்பாறை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள மருத்துவமனைகளில் பணியாற்றியுள்ளார், ஆயிரக்கணக்கான நோயாளிகளின் பராமரிப்பிற்குப் பங்களித்துள்ளார்.

இலவசக் கல்வியை வலுப்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தி, களனி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களில் தற்போது விரிவுரை செய்யும் ஒரு கல்வியாளரும் ஆவார். மேலும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் குடும்ப சுகாதார பிரிவை நிறுவிய நிறுவன உறுப்பினர்களில் ஒருவராகவும் காணப்படுகின்றார்.

மேம்பட்ட உட்கட்டமைப்பு, வீட்டுவசதி தீர்வுகள் மற்றும் புதிய வருமானம் ஈட்டும் வழிகளைக் கொண்ட ஒரு வளமான மற்றும் நவீன நகரத்தை உருவாக்குவதே கொழும்பிற்கான ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைநோக்குப் பார்வை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார்.

ஹனிஃபா ஊழல் இல்லாத புதிய முகத்தையும் புதிய தலைமையையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். தலைநகரில் நிலையான வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

# நீர் அபிவிருத்தித் திட்டங்களை முடிக்க விரைவில் நடவடிக்கை

## பிரதமர் உறுதியளிப்பு

அபிவிருத்திப் பணிகள் தாமதமாகியுள்ள நீர் திட்டங்கள் மற்றும் சமூக நீர் திட்டங்களை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ஹரிணி தெரிவித்தார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக நீர் தின கொண்டாட்டத்தில் பங்கேற்றபோது பிரதமர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

நீர் இணைப்புகளை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்ட சிறப்பு மென்பொருளின் வெளியீடு பிரதமரின் தலைமையில் நடைபெற்றது. உலக நீர் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் நடத்தப்பட்ட நாடகம் மற்றும் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் நிபுணர்களுக்கு விருதுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

2025 ஆம் ஆண்டுக்கான தொடக்க பட்ஜெட்டில் நீர் வழங்கல் நடவடிக்கைகள் குறித்த விசாரணைகளுக்காக ரூ.41,234 மில்லியன் ஒதுக்கப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# சித்திபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள்

மாணவ தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை -2024 இல் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் 07-02-2025 அன்று வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அராலி சரஸ்வதி வித்தியாசாலை முதல்வர் கு.பாலமுருகன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் டாக்டர் சூ.நித்தியானந்தன்(நிறுவுனர், ரட்ணம் பவுண்டேசன்) அவர்களும், அவர் பாரியார் சரோஜினிதேவி அவர்களும் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

பிரதம விருந்தினர் தனது உரையில் -

இங்குள்ள இளைஞர்கள், போதைப்பொருள் பாவனையாலும், திறன்பேசி பாவனையாலும் கெட்டு சீரழிந்து செல்லும் போது, இப் பாடசாலையின் பதின்ம வயதினருக்கான, நிகழ்நிலைக் கல்விக்கான சாதனங்களை பெற்றுக் கொள்வது முன்னேற்றமான விடயம் என்பதுடன், இதனை இம் மாணவர் சமூகம் வினைத்திறனாகப் பயன்படுத்துவது, அராலி மண்ணிற்கு கிடைத்த சிறந்த பொக்கிஷம் எனக்குறிப்பிட்டார்.





# நண்பர்களுடன் கடலில் குளிக்கசென்ற இளைஞன் யாழ். சேந்தாங்குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்



யாழ். சேந்தாங்குளம் கடலில் வெள்ளிக் கிழமை நண்பர்களுடன் குளிக்கச் சென்ற இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கோவில் வாசல், காங்கேசன்துறை வீதி, இணுவில் என்ற முகவரியைச் சேர்ந்த பி.சாருஜன் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

குறித்த இளைஞன் அவரது நண்பர்கள் 14 பேருடன் குளிப்பதற்காக வெள்ளிக்கிழமை மதியம் இளவாலை - சேந்தாங்குளம் கடலுக்கு சென்றனர். கடலில் குளித்துக்கொண்டு இருந்தவேளை திடீரென கடல் அலையில் அடித்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில் குறித்த இளைஞனை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் இளைஞனின் சடலம் கரை ஒதுங்கியது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

குறித்த கடல் பகுதியானது பாரிய அலை எழும்பகுதியாககாணப்படுகிறது. இருப்பினும் எந்தவிதமான எச்சரிக்கை அறிவிப்புகளும் காட்சிப்படுத்தப்படவில்லை. இதற்கு முன்னரும் இவ்வாறு மரணம் இதே பகுதியில் சம்பவித்துள்ளன. எனவே உரிய எச்சரிக்கை சமிக்ஞைகளை காட்சிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# புத்தளம் மாநகர சபை தேர்தலிலுக்கு 18 உறுப்பினருக்காக 230 பேர் போட்டி

## முழுமையாக மூன்று வேட்பு மனுவும் பகுதியளவில் ஒன்றும் நிராகரிப்பு

(சியாஜ்)

நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் புத்தளம் மாநகர சபைக்கான 18 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 08 அரசியல் கட்சிகள் மற்றும் 03 சுயேச்சை குழு என 230 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். முழுமையாகமூன்றுவேட்புமனுவும்பகுதியளவில் ஒருவரின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டது.

புத்தளம் மாநகர சபைத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் என 16 கட்சிகள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதிக்குள் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சர்வஜன அதிகாரம் என 10 அரசியல் கட்சிகளும் ஏ.ஓ அலிக்கான், ஏ.எஸ் சுபியான், எம்.எல் பால்ராஜ், ஏ.எஸ்.எம் அஸ்லம் ஆகியோரின் தலைமையிலான 04 சுயேச்சை குழுக்களால் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஸ்ரீலங்காதொழிலாளர்காங்கிரஸ்ஏஎஸ்.எம்.அஸ்லம் சுயேச்சை குழு ஆகியவைகளின் வேட்புமனுக்கள் முழுமையாக நிராகரிக்கப்பட்டதுடன் பகுதியளவில் எம்.எல் பால்ராஜ் தலைமையிலான சுயேச்சை குழுவில் மொஹமட் றம்சான் ராசா மொஹமட் என்பவரின் வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டதுடன் ஏனைய 08 அரசியல் கட்சிகள் மூன்று சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புத்தளம் மாநகர சபைக்கு 11 வட்டாரங்களில் இருந்து 11 உறுப்பினர்களும் போனஸ் உறுப்பினர்கள் 07 என 18 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு இம்முறை 36,523 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா தனியார் மருந்தக சங்கத்தால் விசேட இப்தார் நிகழ்வும் ஒன்றுகூடலும்

(ஹலால்தீன்)

திருகோணமலை மாவட்ட தனியார் மருந்தக நலன்புரி சங்கத்தின் விசேட இப்தார் நிகழ்வும் ஒன்று கூடலும் கிண்ணியா நகர பலநோக்கு மண்டபத்தில் வியாழக்கிழமை இடம்பெற்றது.

தனியார்மருந்தகஉறுப்பினர்கள்ஒன்றுசேர்ந்துஏற்பாடு செய்த இந்நிகழ்வில் அதிதியாக கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம் அஜித், மூதூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.வி.எம்.ஹில்மி, திருகோணமலை உணவு மற்றும் மருந்து பரிசோதனை உத்தியோகத்தர்களான ரி.சிவகுமார், முகுந்தன் முதலானோர்களுடன் ஏற்பாட்டுகுழுவின்தலைவர் எஸ்.சஞ்சீவகாந்த், செயலாளர் எஸ். சாதிக், பொருளாளர் எஸ். ரணவீர, சங்கத்தின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் யுவதி யாழ். இந்து மயானத்தில் கைது

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து மயானத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் யுவதி ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இருபாலை இந்து மயானத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் யுவதி ஒருவர் நின்றுகொண்டிருப்பதாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்துசம்பவஇடத்திற்குவிரைந்தபொலிஸார் குறித்த யுவதியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணையில்யுவதியிடம்இருந்துஐஸ்போதைபொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.




# சம்மாந்துறை சபை எங்கள் கைவசம் வந்தவுடன் உடனடியாக இரு விடயங்கள் அமுல்படுத்தப்படும்

## மாம்பழச் சின்ன சுயேச்சை குழு தலைவர் உதுமான்கண்டு நாபீர் தெரிவிப்பு

(அபு அலா)



சம்மாந்துறை பிரதேச மக்களுக்கு நன்மையான விடயங்களை முன்னெடுக்க பல திட்டங்களை திட்டமிட்டுள்ளோம். அதனை அமுல்படுத்துவதாக இருந்தால் சம்மாந்துறை பிரதேச சபை எங்கள் கைவசம் வரவேண்டும். அப்போதுதான் எங்களின் திட்டங்களை அமுல்படுத்த முடியும் என்று அம்பாறை மாவட்ட மாம்பழச் சின்ன சுயேட்சை குழு ஒன்றின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று (சனிக்கிழமை) ஊடகங்களுக்கு அவர் கருத்துத்தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சம்மாந்துறை பிரதேசசபை எங்கள் கைவசம் வந்தவுடன் உடனடியாக இரு விடயங்களை அமுல்படுத்தவுள்ளோம். முதலாவது, சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி கடை உரிமையாளர்களை ஒன்றிணைத்து அவர்களுடன் கலந்துரையாடி மாட்டிறைச்சி விலையை ஒரு கிலோ கிராம் 1600 ரூபாய்க்கு விற்கக்கூடியளவில் அதன் விலையை குறைக்கவுள்ளோம். இதில் மாட்டிறைச்சி உரிமையாளர்களுக்கு எவ்வித நஷ்டங்களும் ஏற்படாதவாறே இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இரண்டாவதாக மக்களுக்கு அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற பொருள்களின் விலைகளில் 10 சதவீத கழிவை வழங்குவதற்கான விசேட திட்டமொன்றையும் அமுல்படுத்தவுள்ளோம்.

இதற்கான முன்னெடுப்புகளை கட்டார், சவூதி அரேபியா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் இணைந்து இத்திட்டத்தை அமல்படுத்துகின்றபோது அரசாங்கத்தின் ஆலோசனை மற்றும் அனுமதி போன்ற உதவிகளைப்பெற்று எமது சம்மாந்துறை பிரதேச மக்களுக்கான விடயங்களை செய்யவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# யாழில் போதையில் குடும்பத்தினருடன் தகராற்றில் ஈடுபட்ட இளைஞன் கைது

போதையில் தனது குடும்பத்தினருடன் தகராறில் ஈடுபட்ட இளைஞன் ஒருவன் ஊர்காவற்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத்தினரால் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை பகுதியை சேர்ந்த 18 வயதான இளைஞன் ஒருவனே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்தஇளைஞன்கஞ்சாமற்றும்ஐஸ்போதைப்பொருள்களுக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்ஊர்காவற்துறைபொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் விழா

யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் விழா நாளைய தினம் ஞாயிற்றுகிழமை மாலை 03.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கலாச்சார மண்டபத்தில் அகில இலங்கை திருவள்ளுவர் மன்ற தலைவர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் யாழ் மாவட்ட செயலர் ம பிரதீபன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் பிரதேச செயலர் சிவஷ்ரீ சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வள்ளுவர் காட்டிய வாழ்வியல் கருத்துக்கள் இன்றைய சமூகத்திற்கு பெரிதும் ஏற்படையதாக உள்ளன ! ஏற்புடையதாக இல்லை! எனும் தலைப்பில் விசேட பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

# தேசிய காங்கிரஸ்யின் உள்ளூராட்சி வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

(ஜிப்ரான்)

தேசிய காங்கிரஸ் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வேட்பு மனுக்களை அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகாணேமலை மாவட்டங்களில் தாக்கல் செய்திருந்தது.

அம்பாறையில் நான்கு சபைகளில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருந்தாலும், திருகாணேமலையில் ஆறு சபைகளிலும் தேசிய காங்கிரஸின் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்

பட்டுள்ளன என்று தேசிய காங்கிரஸ் கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர்சட்டத்தரணிமர்சூம்மௌலானா தெரிவித்தார்.

மேலும், ஏறாவூர் நகரசபை மற்றும் அக்கரைப்பற்று, சம்மாந்துறை பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள்ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று மாநகர சபை உட்பட ஏனைய மூன்று சபைகளுக்கான வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இருந்தாலும் அதற்கெதிரான சட்ட நடவடிக்கைகளைத் தொடர்வதற்கான பணிகளை கட்சி மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.




எனவே, தீயசக்திகளின் பொய்ப் பிரசாரங்களை முறியடித்து

தேசிய காங்கிரஸின் ஆதரவாளர்கள் இது தொடர்பில் தெளிவாக இருக்குமாறு கட்சியின் தலைமை வேண்டி நிற்கிறது.

தீயசக்திகள் எத்தனை மாயவலைகளை பின்னினாலும் அவற்றை முறியடிக்கும் என்பதை நாம் பலமுறை நிரூபித்து இருக்கிறோம், அற்ப சலுகைகளுக்காக தே.காஸின் தலைமை ஒரு போதும் சோரம் போனதாக வரலாறு ஏதும் இல்லை என்று சட்டத்தரணி மர்சூம் மௌலானா மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்முனை நீதிமன்றத்தில் தப்பியோடியவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

கல்முனை நீதிமன்றத்தில் இருந்து தப்பியோடிய சந்தேகநபரை வியாழக்கிழமை இரவு வேளையில் நிந்தவூர் பொலிஸார்கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டப்பளம் பகுதியில் ஆடு திருடிய இரண்டு சந்தேக நபர்களை நிந்தவூர் பொலிஸார்கைதுசெய்துள்ளனர். இதில், ஒரு சந்தேக நபர் கடந்த 2025.02.13 ஆம் திகதி கல்முனை நீதிமன்றத்தில் இருந்து தப்பியோடியவர் என தெரியவந்துள்ளது.

சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபர் ஒருவரும், சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய சந்தேக நபர் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பனசட்டநடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதான இருவரிடமும் மேற்கொண்ட மேலதிக விசாரணையின் போது குறித்த சந்தேக நபருக்கு நிலுவையில் ஆடு, மாடு, தங்க நகை உள்ளிட்ட பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஐந்துக்கு மேற்பட்ட பிடியாணை காணப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கைது நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க நெறிப்படுத்தலில் அக்கரைப்பற்று பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நந்தநாராயணவின் வழிகாட்டுதலில் நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நஜீம் தலைமையிலான குழுவினரால் இக் கைது நடவடிக்கை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் பள்ளமடு - பெரிய மடு பிரதான வீதியில் கோர விபத்து

## ஒருவர் சாவு ; மூவர் படுகாயம்

மன்னார் - பள்ளமடு பெரியமடு பிரதான வீதியில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் என அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

பெரிய மடு பிரதான வீதியூடாக பயணித்த லொறி வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்திற்கு உள்ளாகிய நிலையில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த லொறியில் 4 நபர்கள் பயணித்துள்ளனர்.

இதன் போது, ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததோடு, சாரதி உள்ளடங்களாக மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்த மூவரும் மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஓடையில் விழுந்து டிப்பர் விபத்து

## சாரதி காயம்

மாத்தளை - கண்டி வீதியில் பலகடுவ, தேதுனு பாலத்தில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று ஓடையில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து வெள்ளிக் கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

மணல் ஏற்றிச்சென்ற டிப்பர் வாகனம் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் காயமடைந்த டிப்பர் வாகனத்தின் சாரதி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.








## இலவச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களை விரைவுபடுத்துதல் மற்றும் எதிர்காலத் திட்டங்களைத் தயாரிப்பது போன்ற விடயங்களில் இந்தக் கலந்துரையாடல் கவனம் செலுத்தியது.

இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, நாட்டின் மருத்துவமனை அமைப்பின் மூலம் இந்த நாட்டு மக்களுக்கு உயர்தர மருந்துகளைத் தொடர்ந்து வழங்குவதே தனது அமைச்சின் முதன்மையான பொறுப்பாகும் என்றார். இந்தப் பணியை மேற்கொள்வதில் தற்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறினார்.

நாட்டுக்குத் தேவையான மருந்துகளை நாட்டுக்குள்ளேயே உற்பத்தி செய்யும் திட்டம் விரைவில் பொது மற்றும் தனியார் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

## லஞ்சம் பெற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பட மூன்று பேரைத் தாம் கைது செய்துள்ளதாக லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பனமுரவைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரின் முறைப்பாட்டை அடுத்து, துறை ஆணையரின் ஒப்புதலுடன் சான்றிதழை வழங்குவதற்காக ரூ. 1மில்லியன் கோரினர் என்ற குற்றச்சாட்டின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

களனியைச் சேர்ந்த ஒரு தொழிலதிபர், பிலிமத்தலாவையைச்சேர்ந்தஒருதொழிலதிபர் மற்றும் நாவலப்பிட்டியைச் சேர்ந்த ஒரு அரசு சாரா நிறுவன ஒருங்கிணைப்பாளர் என மூன்று சந்தேகநபர்களும் நேற்று கொழும்பில் உள்ள ஒரு பிரபலமான ஹோட்டலில் ஒன்றில் வைத்து லஞ்சம் பெற முயன்றபோது பிடிக்கப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சிறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னகோனை ஏப்ரல் 3வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் கடந்த மாதம் 28ஆம் திகதி பிடியாணை பிறப்பித்தது.

2023ஆம் ஆண்டு டிசெம்பர் 31 வெலிகமையில் உள்ள ஹோட்டலுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரியொருவர் உயிரிழந்தார் இதன் காரணமாகவே தேசபந்து தென்னகோன் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# வலி. தெற்கு பிரதேச சபையில் தமிழ் அரசு ஆட்சி அமைக்கும்

## திடமாக நம்புகிறார் வேட்பாளர் டினேஸ்

இந்தமுறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2011 காலத்தைப் போன்று தமிழரசுக் கட்சி சகல வட்டாரங்களையும் வெற்றிபெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 10 ஆம் வட்டாரமாகிய சங்குவேலி வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளரும் சமாதான நீதிவானுமாகிய லயன் க.டினேஸ்.

சங்குவேலியில் பிரகாஷ் தலைமையில் ஏற்பாடுசெய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் கடந்த 2011, 2018 ஆம் ஆண்டுக்காலப்பகுதி உள்ளூராட்சித் தேர்தலில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு, மக்கள் நன்மதிப்பை வென்ற வேட்பாளர்களையே எமது முதன்மை வேட்பாளர் தி.பிரகாஷ், கட்சி பேதங்களுக்கப்பால் இம்முறை தேர்தலில் களமிறக்கியுள்ளார். கடந்த தேர்தலில் வலிகாமம் தெற்கு பிரதேசத்தில் உண்மையாக மக்களுக்கு சேவையாற்றிய - மக்கள் சேவகர்களை அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும் சரி - எமது தலைவர் திறந்த அழைப்புடன் அவர்களை ஏற்று தமிழரசின் சின்னமாகிய வீட்டின் கதவைத் திறந்துள்ளார். அவர்மீதுள்ள நம்பிக்கையின் பின்னால் அனைவரும் வீட்டினுள் அணிதிரண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என 2018 தேர்தல்களில் தத்தமது பிரதேச மக்கள் மனங்களை வென்று அவர்கள் மனங்களில் இடம்பிடித்து சிறப்பான அபிவிருத்தியை மேற்கொண்டவர்களை இம்முறை தமிழரசு தம்முடன் இணைத்துள்ளது.

எமது தலைவர் பிரகாஷும் 2011 தேர்தலில் வலி.தெற்கு மக்களின் ஒட்டுமொத்த அமோக வாக்குகளால், அதிகப்படியான வாக்குகளை வென்று மக்களாலே தவிசாளராக்கப்பட்ட ஓர் இளைஞர். அவரது காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் நான் சொல்லி மக்கள் அறியவேண்டியதில்லை. பிரதேசசபைக்கு பல்வேறு சவால்களுக்கு மத்தியில் நவீன வசதிகள் கொண்ட புதிய கட்டடத் தொகுதி ஒன்றை தனியான இடத்தில் உருவாக்கினார். மருதனார்மடத்தை பெயர் சொல்ல வைத்தார். சுன்னாகம் பஸ்தரிப்பு நிலையத்தை விஸ்தரிப்புச் செய்து, அரச மரத்தின் கீழ் அமர்ந்திருந்த புத்தர் சிலையை அப்புறப்படுத்தினார். இவ்வாறு ஏராளமான நிலைபேண்தகு அபிவிருத்திகளை மேற்கொண்ட தலைவரின் கீழ் இம்முறை அனைவரும் அணிதிரண்டுள்ளோம்.

ஆகவே, நிச்சயமாக 18 வட்டாரங்களிலும் இம்முறை தமிழரசு வெற்றிபெற்று எமது ஆட்சி மலரும். நம்பிக்கையுடன் உங்கள் வாக்குகளை எமக்களியுங்கள். வாக்குகளை அவமே அரச கட்சிக்கு அளித்துவிட்டுப் பின் வருத்தப்படாதீர்கள். - என்றார்.

# திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிக்கத் தகுதிபெற்றோர்

(ஹலால்தீன்)

இந்தத் தேர்தலில் 3 லட்சத்து 19 ஆயிரத்து 399 பேர் திருகோணமலை மாவட்டத்தில் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

அந்தவகையில் -

திருகோணமலை மாநகரசபை -38338,
கிண்ணியா நகரசபை- 29131
வெருகல் பிரதேச சபை -9840,
சேருவில பிரதேச சபை - 11859,
கந்தளாய் பிரதேச சபை - 39124,
மொரவெள பிரதேச சபை - 6918,
கோமரன்கடவல பிரதேச சபை -6692,
பதவிஸ்ரீபுர பிரதேச சபை - 9740,
திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை -35617, குச்சவெளி பிரதேச சபை- 29540,
தம்பலகாமம் பிரதேச சபை - 24761,
மூதூர் பிரதேச சபை- 50671,
கிண்ணியா பிரதேசசபை -27168 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.



# சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வருடாந்த இப்தார் தின நிகழ்வுகள்

(தில்சாத் பர்வீஸ்)

2025 ஆண்டுக்கான வருடாந்த இப்தார் நிகழ்வு சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் தலைமையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் வெள்ளிக்கிழமை மிக விமரிசையாக நடைபெற்றது.

சமூக நல்லிணக்கம் இப்தாராக இடம்பெற்ற இந்நிகழ்வில் நோன்பின் மாண்புகளை பற்றி சிங்களத்தில் அல்ஹாஜ் மௌலவி சஹ்றான் ஹஸன் மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இதன் போது, அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமூத்திர ஜீவவின் 39 வருட சேவையைப் பாராட்டியும், எதிர்வரும் 2025.04.12 பிரிவிடை நிகழ்வினை முன்னிட்டும் நினைவுச் சின்னமும், பொன்னாடை போர்த்தி அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உபதேச குழுவின் தவிசாளர் ஏ.ஜே. காமில் இம்டாட் ஆகியோரால் கௌரவிக்கப்பட்டது.

மேலும், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் அவர்களுக்கு டேலண்ட் பிளஸ் டிவியின் ஆலோசகரால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எச். சமூத்திர ஜீவ பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததோடு அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எச்.ஜி.டி.எஸ். அமரசிங்க, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார், சம்மாந்துறை பிரதேச செயலாளர் தேசபந்து எஸ்.எல்.முஹம்மது ஹனீபா, மேல் நீதிமன்ற அரச சட்டத்தரணி லாபீர் சட்டமுதுமானி எம்.ஏ.எம்.லாபீர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் வடக்கு மற்றும்





கிழக்கு மாகாண இணைப்பாளர் எம்.எம்.ஜி.பி.எம். றசாட், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌசாத், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் டி.பிரபாசங்கர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி விஹாரி ராஜகுரு, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பிரதம இலிகிதர் பிரபாகர், பொலன்னறுவை மாவட்ட சிரேஷ்ட நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்.எம். நவாஸ், சம்மாந்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள், சம்மாந்துறை பொலிஸ் நிலைய உபதேச குழுவின் தவிசாளர் ஏ.ஜே. காமில் இம்டாட், சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். மகேந்திர குமார், கல்முனை, பெரியநீலாவணை, சவளக்கடை, நிந்தவூர், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், அரச திணைக்கள உயர் அதிகாரிகள், ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், சர்வ மதத்தலைவர்கள், வர்த்தக சங்க மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், முக்கியஸ்தர்கள் ஆகியோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# உணவகங்களுக்கு வழக்குத் தாக்கல்

## கிண்ணியாவில் அதிரடி

(ஹலால்தீன்)

திகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எ.எம்.எம்.அஜித் தலைமையில் 2025-3-20ஆம் திகதி பரிசோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தின் பொது சுகாதார பரிசோதகர்கள் பலர் வரவழைக்கப்பட்டு கிண்ணியா சுகாதார பிரிவில் உள்ள அனைத்து பாபிகியு கடைகளும் விஷேட பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இவற்றில் நுகர்வோருக்கு பொருத்தமற்ற உணவுப் பொருள்கள் மற்றும் சுமார் 60 கிலோ கோழி இறக்கைகள் கைப்பற்றப்பட்டு 20 குற்றச்சாட்டியின் கீழ் எட்டு பாபி஭ூகியு கடைகளுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதோடு ஒரு கடையும் மூடப்பட்டது.

எதிர் வரும் காலங்களில் ஏனைய வர்த்தக நிலையங்களும் திடீர் பரிசோதனைக் உட்படுத்தப்படும் என கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2025இல் வெளியிடப்பெற்றது